# பெரியபுராணத்தில் வெளிப்படும் பக்திநெறி

**குமரன் இராமையா** [1]
Kumaran Ramaiya[1]

**Abstract**

The main objective of this Paper is to bring out the features of Devotion in Periyapuranam. Devotion is the love of the human Soul or Mind with God. The basis of devotion is to sacrifice everything unto God selflessly. This Devotion bridges the intensity of human love and God. Periyapuranam shows two ways of Devotion, namely Extreme Devotion and Soft Devotion. Almost one third of the Nayanmars indulge in extreme, blind love while a majority of the rest engage in Soft Love on God. By the term Soft Love, it refers to the four ways of attaining Godliness, viz., Sariyai, Kiriyai, Yogam and Gnanam. Through the method of discourse and critical analysis, the Philosophy and Concept of Saivaite culture are explained in detail.

*Key Words : Periyapuranam, Devotion, the Four Ways, Extreme Love, Soft Love*

## 1.0 முன்னுரை

இன்றைய சூழலில் பக்தி என்ற பெயரில் பல கொடுமைகள் தமிழர் வாழ்வினில் நடைபெறுவதைக் காணமுடிகின்றது. தற்பெருமைக்கும் புகழுக்கும் சுயநலத்துக்கும் சிலர் மற்றவர்களுக்கு உதவி செய்வதாய்ப் பக்தி என்ற போர்வையில் நடமாடுகின்றனர். இன்னும் சிலர் பஞ்சமகாப் பாவங்கள் பல செய்து உபகாரமாகப் பக்தி என்ற பெயரில் கடவுளுக்குக் காணிக்கை செலுத்துகின்றனர் (பாலமுருகன், 2013:2). பக்தன் ஒருவன் பக்தி மேலீட்டினால் ஆலயத்தை நாடும் பொழுது அங்கே அர்ச்சனை முதலாகப் பரிகாரம் ஈறாகக் காசு பறிக்கும் வணிகக் கூடங்களாக ஆலயங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன (ஜெயமோகன், 2015:6).

பக்தியைப் பற்றியத் தெளிந்த சிந்தனையைப் பன்நெடுங்காலமாகச் சைவ ஆகமங்கள் வலியுறுத்துகின்றன (குலசீரசிங்கம், 1992:4). முறையான பக்தி மார்க்கத்தைச் சைவ நாயன்மார்கள் பின்பற்றி முக்தியடைந்த நிலையினைப் பக்தி இலக்கியம் பறைசாற்றுகின்றது. பக்தி என்றால் என்ன? யாருக்காக யார் பக்தி செலுத்த வேண்டும்? பக்தி செய்யும் வழிகள் யாவை? என்பன தொடர்ந்து ஆராயப்படுகின்றது.

பக்தி என்ற சொல் உயிர் இறைவனிடத்தில் கொள்ளும் அன்பு என்ற பொருளுடையது. உணர்வுப்பூர்வமாக அன்பின் மூலம் இறைவனை வழிபடுவதே பக்தி (இராசமாணிக்கனார், 2008:112). மனிதனை இறைவனோடு இணைக்கும் உறவுப் பாலமாக அமைவது பக்தி. இறை அன்பு எந்தவொரு நிபந்தனையுமின்றி மனிதனின் இதயத்திலிருந்து வெளிப்படும் மாறாத தூய உணர்வு என்று அறியப்படுகின்றது (கோபாலகிருஷ்ணன், 1990:30).

திருஞானசம்பந்தன் (1973:5) தனது 'Concept of Bhakti' என்ற நூலில், அறிவு நிலையைக் கடந்து இறையை நோக்கிப் பெருக்கெடுக்கும் ஆழ்ந்த சிந்தனையினால் ஏற்படும் அன்புணர்வே பக்தி என்று உரைக்கின்றார். மனிதன் தன்னுடைய முயற்சியில் வெற்றி அடையவும், நன்னெறியில் நடப்பதற்கும், உலகியல் துன்பங்களிலிருந்து விடுபடவும், முக்தியடையவும் பக்தி உறுதுணைபுரிகின்றது (வெள்ளைவாரணன், 1994:67). எனவே, பக்தி

[1]The author is a PhD candidate at The Department of Indian Studies, University of Malaya.
kujamasha@gmail.com

*என்பது கடவுள்மீது செலுத்தப்படும் தூய அன்பு உணர்வாகும். இது எந்த நிபந்தனையுமின்றி அறிவு நிலையைக் கடந்த என்றென்றும் மாறாத ஆழ்மனத்திலிருந்து கிளர்ந்தெழும்பும் அன்பு உணர்வு என்று தெளியப்படுகின்றது.*

**2.0 பெரியபுராணத்தில் வெளிப்படும் பக்தி நெறியைப் பற்றிய தரவுகள்**

*பெரியபுராணம் முழுவதையும் முகிழ்ந்துபார்க்கும்பொழுதுபக்திநெறியேநாயன்மார்களின் வாழ்க்கையில் ஓர் அங்கமாக வெளிப்படுவது புலனாகின்றது. அதற்கான சான்றுகள் கீழ்க்காணும் அட்டவணையில் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன.*

**அட்டவணை 1:**

**பெரியபுராணத்தில் வெளிப்படும் பக்தி நெறி பற்றிய தகவல்களைக் காட்டுகின்றது.**

| திருமுறை/ புராணம்/ பாடல் | வரிகள் | நாயன்மார் |
|---|---|---|
| 12:36:56 | தனையன் தன்னைத் தந்தைதாய் அரிவா ரில்லைத் தாழாமே எனையிங் குய்ய நீபயந்தான் தன்னை அழைப்ப... | சிறுத்தொண்டர் |
| 12:21:225 | மாலைகளுஞ் செம்பொற் றாளே சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்பார்வாழத் திரு... | திருநாவுக்கரசர் |
| 12:16:12 | மகிழ்ச்சி மனங்கொள்ள நாளும் பூசை வழுவாமே பன்னும்பெருமை அஞ்செழுத்தும் பயின்றே பணிந்து... | முருகர் |
| 12:30:25 | கீழ்த் தேவிருக்கை அமர்ந்தருளிச் சிவயோகந் தலைநின்று பூவலரும் இதயத்துப் பொருளோடும் புணர்ந்திருந்தார் | திருமூலர் |
| 12:28:70 | சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம் பவமதனை யறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம் உவ... | திருஞான சம்பந்தர் |
| 12:24:19 | கறிஅமுதங் குதவாதே திருஅமுது கைகூட வெறிமலர்மேல் திருவனையார் விடையவன்தன் அடியாரே பெறலரிய... | காரைக்கால் அம்மையார் |

*ஆயுர்வேதக் கலைகளிலும் வடமொழிக் கலைகளிலும் புலமை வாய்ந்த பரஞ்சோதியார் என்னும் சிறுத்தொண்டர் படைத்தொழிலிலும் பயிற்சி பெற்ற தகவல் வெளிப்படுகின்றது (பெ.புரா. 12:36:3). சிவபக்தியிற் சிறந்த இவர் சோழ மன்னனிடத்தில் சேனாதிபதியாய் இருந்து வேற்றரசர்கள் பலரைக் கொன்று நாடுகளைக் கைப்பற்றியிருப்பது உணரப்படுகின்றது (பெ.புரா. 12:36:5). வாதாபி போரில் வெற்றி பெற்றதால் பொன்னும் பொருளும் தந்து சிவத்தொண்டு ஆற்ற மன்னர் விடைகொடுத்த செய்தி தெரிய வருகின்றது (பெ.புரா. 12:36:6). சிவத்தொண்டில் ஈடுபட்டிருக்குங்கால் பைரவ வேடம் பூண்டு வந்த இறைவன் மனித கறியமுது கேட்ட செய்தி புலப்படுகின்றது (பெ.புரா. 12:36:50). எங்குத் தேடியும் சிவனடியார் கேட்டதுபோல, ஐந்து வயது பாலகன் கிடைக்காது போகவே, தனது மகனைத் தாய்ப் பிடிக்கத் தந்தை அரிந்த உண்மை குறிக்கப்பட்டுள்ளது (பெ.புரா. 12:36:63). இதுபோலவே மிகவும் வன்மையாகப் பக்தியைச் செலுத்தியவர்களுள் கண்ணப்ப நாயனார், இயற்பகை நாயனார், மூர்த்தி நாயனார், கணம்புல்ல நாயனார் போன்ற பலர் அடங்குவர்.*

*பெற்றோரை இழந்த திருநாவுக்கரசர் சமண சமயத்தில் புகுந்து சமயக் கலைகளில் புலமையுந் தெளிவுங் கண்ட அவருக்கு தருமசேனர் என்னும் பெயர் சூட்டி, குருவாகச்*

சமண சமயத்தினர் கொண்டாடிய செய்தி வெளிப்படுகின்றது (பெ.புரா. 12:21:39). சிவநெறியில் நின்ற தமக்கை திலகவதியார் சமணப் படுகுழியில் வீழ்ந்து கிடக்கும் தம்பியாரை மீட்டருள இறைவனிடம் வேண்டிய செய்தி புலப்படுகின்றது (பெ.புரா. 12:21:46). இறையருளால் தருமசேனருக்குச் சூலை நோய் வந்து வருந்தி சமண மந்திரத்தில் நோய் தீராததால் திலகவதியாரின் மடம் புகுந்த தகவல் அறியப்படுகின்றது (பெ.புரா. 12:21:62). தமக்கையார் வேண்டுகோளுக்கிணங்க, தருமசேனர் பற்றருக்கும் பேரருளாளனான இறைவனுக்குத் தொண்டு செய்ய கட்டளையிட்ட உண்மை தெளிவாகின்றது (பெ.புரா. 12:21:65). தமக்கையாருடன் சேர்ந்து கோவில் தொண்டு செய்த போது இறையருளால் சூலை நோய் நீங்கப்பெற்று ‘நாவுக்கரசு’ என்ற பெயரை இறைவன் வழங்கியது சேக்கிழாரால் குறிக்கப்பட்டுள்ளது (பெ.புரா. 12:21:74). இறைவனைத் தியானித்தும், வாயால் புகழைப் பாடியும், கைத்தொண்டு செய்தும் தல யாத்திரை மேற்கொண்ட வரலாறு குறிப்பிடத்தக்கது (பெ.புரா. 12:21:74). இதுபோலவே மென்மையான வழியில் நின்றவர்களுள் அப்பூதியடிகள், நமிநந்தி நாயனார், திருநீலநக்க நாயனார் போன்ற பலர் உள்ளனர்.

முருக நாயனார் சோழ நாட்டிலே திருப்புகலூரிலே தோன்றியவரென்று அறியப்படுகின்றது (பெ.புரா. 12:16:6). சிவபக்தியிலும் அடியார் பக்தியிலும் சிறந்த இவர் நாடோறும் வைகறையில் எழுந்து நீராடி திருநந்தவனம் புகுந்து கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நால்வகைப் பூக்களைக் கொய்து வந்து அதனைக் கொண்டு இண்டை, தாமதம், கண்ணி, பிணையல் முதலிய மாலைகள் தொடுத்துச் சிவனுக்குச் சாற்றும் செய்தி குறிக்கப்பட்டுள்ளது (பெ.புரா. 12:16:8). நெஞ்சங் குழைத்து உருகி அஞ்செழுத்து ஓதி, திருத்தொண்டு செய்துவந்த தகவல் தென்படுகின்றது (பெ.புரா. 12:16:12). இதுபோலவே, சிவபூசையில் ஈடுபட்டுத் திருஞானசம்பந்தர், உருத்திர பசுபதி நாயனார் போன்ற பலர் உளர்.

பொதிகைமலையை அடையபலநகரங்களைக்கடந்துசெல்லும்போதுதிருவாவடுதுறையை அடைந்து காவிரிக் கரையினிலே பசுக் கூட்டங்கள் இடையனை இழந்து துன்பத்தில் வருந்திய காட்சியைத் திருமூலர் கண்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது (பெ.புரா. 12:30:12). பசுக்களின் துயரை நீக்க வேண்டி, கருணையோடு சிவயோகி திருமூலர் தமது உடலை ஓரிடத்தில் சேமித்து வைத்துக் கூடு விட்டுக் கூடு பாய்ந்து இடையன் உடலை உயிர்ப்பித்த தகவல் தெரிய வருகின்றது (பெ.புரா. 12:30:14). தனக்கும் இடையனின் மனைவிக்கும் எந்தத் தொடர்புமில்லையென திருமூலர் தெளிவுபடுத்தித் தமது உடல் மறைத்து வைத்த இடத்திற்குச் சென்ற செய்தி தென்படுகிறது (பெ.புரா. 12:30:22). சேமித்த உடல் தேடிக் காணாமல் தியானித்து, சிவாகமத்தின் மெய்ப்பொருளைத் தம் வாயிலாகத் தமிழில் வெளியிட வேண்டி உடலை மறைத்து சிவபெருமான் திருவருள் புரிந்துள்ளதை விளங்கித் தெளிந்த உண்மை பதிவாகியுள்ளது (பெ.புரா. 12:30:23). திருமூலர் திருவாவடுதுறை கோயிலின் மேற்புறத்திலுள்ள அரசமரத்தடியில் அமர்ந்து மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தில் திளைத்து, ஆண்டுக்கு ஒரு மந்திரமாகத் ‘திருமந்திரம் மூவாயிரம்’ உருவாகிய குறிப்பு வரலாற்றில் இடம்பெற்றுள்ளது (பெ.புரா. 12:30:23). சிவயோகத்தில் ஒன்றிய பெருமிழலைக் குறும்ப நாயனார், உருத்திர பசுபதி நாயனார், கழறிற்றறிவார் நாயனார், தொகையடியார்களுள் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் போன்றவர் ஆவர்.

சைவ நெறியை நிலைநாட்ட ஒரு புதல்வரைச் சிவனிடம் தவங்கொண்டதன் பயனாகச் சிவபாத இருதயர் பகவதியார் தம்பதியருக்குத் திருஞானசம்பந்தர் அவதரித்தத் தகவல் அறியப்படுகின்றது (பெ.புரா. 12:28:34). சிவபாத இருதயர் வழக்கம்போல் நீராடப் போகும்போது, மூன்று வயது நிரம்பிய பிள்ளையாரும் தொடர்ந்துபோய் பிரம்ம தீர்த்தக் கரையை அடைந்து தகப்பனார் குளத்தில் மூழ்கி நீராடி வரும் வரையில் கரையிலே பிள்ளையாரை விட்டுச்

*சென்ற செய்தி அறியப்படுகின்றது (பெ.புரா. 12:28:59). தந்தையாரைக் காணாத பிள்ளையார் சிவனை வழிபட்ட முன்னுணர்ச்சி மூண்டெழுந்து அழத் தொடங்கிய குறிப்பு புலப்படுகின்றது (பெ.புரா. 12:28:61). பிள்ளையாரின் பழந்தொண்டைக் கருதி, சிவபெருமான் உமையுடன் காட்சித் தந்து முலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்தூட்டியது உணரப்படுகின்றது (பெ.புரா. 12:28:68). கரைக்கு வந்த தந்தையார் பிள்ளையாரின் எச்சில் பாலைக் கண்டு பாலூட்டியவரைக் காட்டச் சொல்லிக் கோலோச்சிய செய்தி அறியப்படுகின்றது (பெ.புரா. 12:28:85). சிவஞான சம்பந்தர் தன் விரலினாலே அம்மை அப்பரைச் சுட்டி 'தோடுடைய செவியன்' என்று பாடி, பதிலுரைத்தக் குறிப்பு புலப்படுகின்றது (பெ.புரா. 12:28:——). இதுபோல ஞானம் அடையும் முயற்சியில் பல நாயன்மார்கள் சரியை, கிரியை, யோக நெறியில் நின்று ஒழுகிய வரலாற்றுக் குறிப்புகள் சுட்டுகின்றன.*

### 3.0 பெரியபுராணத்தில் வெளிப்படும் பக்திநெறி பற்றிய பகுப்பாய்வு

*இனி பக்தியைப் பற்றிய கருத்துகள் இருநிலைகளில் விவாதிக்கப்படுகின்றன.*

1. **வன்பக்தி**
2. **மென்பக்தி**

### பக்தியின் இருநிலைகள்

*பெரியபுராணம் முழுவதிலும் சிவனடியார்களின் பக்தித் திறம் பரவலாக வெளிப்பட்டு நிற்பதை அறிய முடிகின்றது. நாயன்மார்களின் பக்தித் திறத்தை வன்பக்தி, மென்பக்தி என்ற இருநிலைகளில் பகுத்துக் கூறலாம். கடின நடவடிக்கைகளைக் கொண்ட திண்மையான செயல்பாடுகள் வன்பக்தியாக வெளிப்படுகின்றன (கணபதி, 2005:152). பெரியபுராணத்தில் சிறுத்தொண்ட நாயனார் தனது பிள்ளையை அரிந்து கறியமுது சிவனடியாருக்கு அளித்தது; கண்ணப்ப நாயனார் தன் கண்ணைத் தோண்டி சிவலிங்கத்தில் அப்பியது குறிப்பிடத்தக்க வன்மையான நடவடிக்கைகளாகும். அதுபோல, அடியார் தொண்டு; பூமாலை தொடுத்துப் பூசை வைப்பது; மந்திரங்களை ஜெபித்து இறைவனை வழிபடுவது; யோக நிலையில் இறைவனைத் தியானிப்பது முதலியன கருணையும் மனிதநேயமும் கலந்த செயல்பாடுகளாக விளங்குவதால், மென்பக்தி என வழங்கப்பெறும் (நாககுவாமி, 1989:29). திருநாவுக்கரசு நாயனார், முருக நாயனார், திருமூல நாயனார் போன்றோர் இவ்வகையான மென்பக்தி செலுத்தி, இறைவனை அடைந்த வரலாறு குறிக்கப்பட்டுள்ளது. இருபத்தொரு நாயன்மார்கள் வன்பக்தியும் நாற்பத்திரண்டு நாயன்மார்கள் மென்பக்தியும் செலுத்திய பகுப்பு தெரிய வருகின்றது. இத்தரவுகள் பின்வரும் அட்டவணையில் காண்க :-*

**அட்டவணை 2:**

**பெரியபுராணத்தில் வன்பக்தியும் மென்பக்தியும் கொண்ட நாயன்மார்கள்**

| பக்தி வகை | நாயன்மார்கள் | செயல்பாடுகள் |
|---|---|---|
| வன்பக்தி<br>21 நாயன்மார்கள்<br>33.3% | கண்ணப்பர் | தனது கண்ணைத் தோண்டி சிவலிங்கத்தில் அப்பினார். |
| | சிறுத்தொண்டர் | தனது ஐந்து வயது மகனை அரிந்து சிவனடியார்க்குக் கறியமுது படைத்தார். |
| | இயற்பகையார் | தன் மனைவியைச் சிவவேதியருக்குத் தானமாக வழங்கி தடுத்தவர்களை வாளால் வெட்டி வீழ்த்தினார். |
| | மூர்த்தியார் | இறைவனுக்குச் சந்தனக்காப்பு அளிப்பதற்குச் சந்தனக் கட்டை கிடைக்காததால் தன் முழங்கையைச் சந்தனப்பாறையில் தேய்த்தார். |
| | திருக்குறிப்புத் தொண்டர் | சிவனடியாரின் அழுக்குக் கந்தல் துணியைத் துவைத்தும் பேய் மழையில் நனைந்ததனால் அவர் உடல் குளிரில் நடுங்கச் செய்ததால் சலவைக் கரும்பாறைக் கல்லில் தலையை முட்டி உடைத்து உயிர் மாய்க்கத் துணிந்தார். |
| | கழற்சிங்கர் | பல்லவ மன்னன் கழற்சிங்கரின் துணைவியார் இறைவனின் அர்ச்சனைக்குள்ள வண்ண மலர் ஒன்றை முகர்ந்ததால் செருத்துணை நாயனார் மூக்கைச் சீவினார். ஞாயம் விளங்கியதும் அரசர் அரசியாரின் கையைத் துண்டித்தார். |
| | கலியர் | இறைவனின் திருக்கோயிலில் விளக்கிடுவதற்கு எண்ணெய் வாங்கப் பொருளின்றி வறுமையாகித் தன் கழுத்தை அறுத்து உதிரத்தை வார்க்க முயன்றார். |
| | கோட்புலியார் | பசிக்கொடுமையால் கோட்புலியாரின் உறவினர்கள் அடியார் பூசைக்குச் சேமித்த நெற்குவியலை எடுத்துண்டதை அறிந்தவுடன் சினந்து சுற்றத்தார் அனைவரையும் வாளால் வெட்டி வீழ்த்தினார். |
| | புகழ்ச்சோழர் | புகழ்ச்சோழ மன்னன் தனக்குக் கப்பம் கட்டத் தவறிய அதிகன் என்ற சிற்றரசனுடன் போரிட்டு, மாண்ட வீரர்களுள் ஒரு தலையில் சடைமுடி கண்டுப் பாவ உணர்ச்சி மேலிட்டு, அத்தலையைப் பொற்தட்டில் சுமந்து அக்கினிக்குண்டத்தை வலம் வந்து தீக்குளித்தார். |

| | | |
|---|---|---|
| | செருத்துணையார் | பல்லவப் பேரரசன் காடவர்கோன் கழற்சிங்கனுடைய பட்டத்து இராணி அர்ச்சனைக்குரிய வண்ண மலரை முகர்ந்ததால் அரசியாரின் மூக்கைச் சீவினார். |
| | ஏனாதிநாதர் | வாட் பயிற்சியளித்து வந்த ஏனாதியாரை வீழ்த்த எண்ணிய அதிசூரன் திருவெண்ணீறு வேடமிட்டுப் போரிடும் போது தகுந்த சமயத்தில் கேடயத்தைக் களைந்து சிவவேடத்தைக் காட்டியதால், ஏனாதியார் பக்திக்குத் தலைவணங்கி எதிரியின் வாளால் குத்துண்டு இறந்தார். |
| | சத்தியார் | சிவனடியார்களை யாரேனும் பழித்தும் இகழ்ந்தும் பேசினால் அக்கணமே அவர்களுடைய நாவினைக் குறட்டினால் பிடித்து அரிவார். |
| | கணம்புல்லர் | இறைவனின் கோயிலில் விளக்கு எரித்து வந்த இவர், வறுமையினால் கணம்புல்லைத் திரியாக வைத்தும் வெகுநேரம் எரியாததால் தன் தலைமுடியைத் திரியாக்கி எரியவிட்டவர். |
| | மெய்ப்பொருளர் | மெய்ப்பொருள் நாயனாரிடம் போரில் தோற்றுப் பகைமை கொண்ட முத்தநாதன் வஞ்சகமாக சிவ வேடம்பூண்டு அரண்மனையினுள் நுழைந்து கையிலுள்ள புத்தக முடிப்பினுள்ளிருந்த கத்தியினால் குத்தியும் பாதுகாப்பாகப் பகைவனை அனுப்பி வைத்தார். |
| | சாக்கியர் | சிவலிங்கத்தின் மீது நாடோறும் கல்லெறிந்து வழிபட்டவர். |
| | மானக்கஞ்சாரர் | மகளின் திருமணத்தன்று வந்த அந்தணர் மணப்பெண்ணின் கூந்தலைப் பஞ்சவடிக்கு ஆகுமெனக் கேட்டதும் கத்தியெடுத்து நெடுங்கூந்தலை அரிந்து அமங்கலச் செயலைச் செய்தார். |
| | அரிவட்டாயர் | இறைவனுக்கு ஊட்ட செந்நெல் அரிசியும், மாவடுவும், செங்கீரையும் கூடையில் சுமந்து செல்லும்போது கால் தளர்ந்து விழுந்ததால் மனந்துவண்டு அரிவாளினால் கழுத்தை அரிந்தார். |
| | அப்பூதியடிகள் | அப்பருக்கு அமுது பரிமாற வாழையிலை கொண்டு வரப்போன அப்பூதியடிகளின் மூத்த மகன் பாம்பு தீண்டி இறந்த செய்தியை மறைத்து சிவனடியாருக்குத் திருவமுது படைத்தார். |
| | கலிக்கம்பர் | திருவமுது உண்ணவந்த அடியார்களின் திருவடிகளைத் துணைவியார் நீர் வார்க்கக் |

| | | |
|---|---|---|
| | | கழுவி கொண்டிருந்தபோது தங்களிடம் ஏவலராயிருந்து வெறுத்துச் சென்ற ஒருவருக்கு நீர்வார்க்கத் தயங்கியதால் மனைவியின் கையை வாளினால் வெட்டினார். |
| | சண்டேசுரர் | சிவலிங்கத்திற்கு பாலாபிஷேகம் செய்வதற்கு வைத்திருந்த பாற்குடத்தைக் காலால் இடறிய தந்தையின் காலை வெட்டினார். |
| | எறிபத்தர் | சிவகாமியாண்டார் கொண்டுவந்த பூசைப் பூக்களை மதயானை சிதைத்ததால் எறிபத்தர் யானையையும் மூன்று பாதுகாவலர்களையும் பாகர் இருவரையும் வெட்டி வீழ்த்தினார். |
| மென்பக்தி 42 நாயன்மார்கள் 66.7% | இசைஞானியார் | சடையனாரின் மனைவியாகிய இவர் சுந்தரமூர்த்தியாரைச் சைவ உலகிற்கு ஈன்றளித்தவர். |
| | திருநாவுக்கரசர் | சிவனுக்குப் பாமாலை பாடி, உழவாரத் தொண்டு செய்தவர். |
| | மங்கையக் கரசியார் | பாண்டிய மன்னனோடு மக்களையும் சைவத்திற்கு மாற்றிய உத்தமியர். |
| | விறன்மிண்டர் | சிவனை வணங்குமுன் சிவனடியாரை வணங்குபவர். |
| | சோமாசிமாறர் | திருவைந்தெழுத்து மந்திரத்தை உச்சரித்து சிவனடியவர்களுக்கு திருவமுதளிப்பவர். |
| | திருஞானசம்பந்தர் | மூன்று திருமுறைகளை வழங்கி, சைவம் தழைத்தோங்கச் செய்தவர். |
| | திருநீலகண்ட யாழ்ப்பாணர் | திருஞானசம்பந்தருடன் இணைந்து திருத்தலங்களில் யாழிசைத்தவர். |
| | திருநீலகண்டர் | சிவனடியார்களுக்குத் திருவோடு செய்தளித்தது. |
| | முருகர் | பல்வகை மலர் கொய்து விதவிதமாய் மாலை கட்டி இறைவனுக்குச் சாற்றியவர். |
| | நமிநந்தி அடிகள் | சிவாலயங்களில் விளக்கு ஏற்றியவர். |
| | அமர்நீதியார் | ஆடைகளும் கோவணமும் சிவனடியாருக்கு வழங்கியவர். |
| | ஏயர்கோன் கலிக்காமர் | சிவாலயங்களில் திருத்தொண்டு செய்பவர். |
| | கூற்றுவர் | ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரித்து, சிவனடியார்களுக்குத் தொண்டு செய்தவர். |
| | சுந்தரமூர்த்தியார் | சிவத்தலங்களில் திருப்பாட்டு பாடி, சக மார்க்கத்தில் பக்தி செலுத்தியவர். |
| | கழறிற்றறிவார் | சிவாலயத்தில் திருத்தொண்டு செய்தவர். |

| | | |
|---|---|---|
| | பெருமிழலைக் குறும்பர் | சிவனடியார்களுக்குக் குறிப்பறிந்து திருவமுது செய்விப்பவர். |
| | இளையான் குடிமாறர் | இல்லத்திற்கு வரும் சிவனடியவர்களுக்குப் பூசனை செய்து திருவமுது அளிப்பவர். |
| | அதிபத்தர் | தான் பிடிக்கும் முதல் மீனை இறைவனுக்குத் தானம் செய்தவர். |
| | புகழ்த்துணையார் | சிவாகம விதிப்படி சிவபெருமானை வழிபட்டு வந்தவர். |
| | குலச்சிறையார் | சிவனடியவர்களை வணங்கி இன்னமுது அளித்த பாண்டிய நாட்டு அமைச்சராவார். |
| | குங்கிலியக்கலயர் | சிவபெருமானுக்கு விதிப்படி தூபமிடும் திருப்பணியை மேற்கொண்டவர். |
| | உருத்திர பசுபதியார் | மனம், வாக்கு, மெய்யால் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி சிவத்தொண்டு ஆற்றியவர். |
| | திருநாளைப் போவார் | சிவாலயங்களுக்குத் தேவையான பொருட்களை இலவசமாகத் தந்துதவிய சிவபக்தராவார். |
| | நரசிங்க முனையரையர் | சிவனடியார்களுக்குத் திருவமுது அளித்து நூறு பொற்காசுகளையும் கொடுத்தவர். |
| | திருமூலதேவர் | யோக நிலையில் மூவாயிரம் பாக்களைக் கொண்ட திருமந்திர மாலை அளித்தவர். |
| | நின்றசீர் நெடுமாறர் | சம்பந்தர் தந்த திருநீற்றால் கூன் நீங்கி, சிவநெறியில் அரசாண்டவர். |
| | இடங்கழியார் | சிவாலயங்களில் அர்ச்சனை செய்து திருவமுதும் பொருள்களும் அளித்தவர். |
| | பூசலார் | சிவபெருமானுக்கு மனத்திலே திருக்கோவில் கட்டி வழிபட்டவர். |
| | ஐயடிகள் காடவர் கோனார் | சிவாலயங்கள் எழுப்பி அரசுரிமை துறந்து, தல யாத்திரை மேற்கொண்டு சேத்திர வெண்பா அருளியவர். |
| | ஆனாயர் | புல்லாங்குழலில் ஐந்தெழுத்து மந்திரமோதி இசையால் இறைவனை வசப்படுத்தியவர். |
| | சிறப்புலியார் | சிவனடியார்கள் மீது பேரன்பு கொண்டு எதிர்கொண்டு வணங்கி, திருவமுது அளித்தவர். |
| | மூர்க்கர் | சிவனடியவர்களுக்கு அமுதூட்டி பின்னர்தான் அமுதுண்ணும் பண்பினர். |
| | சடையர் | உலகெலாம் மெய்ஞ்ஞான ஒளி பரப்பிய சுந்தரரை மகவாகப் பெற்றுத் தந்தவர். |
| | வாயிலார் | சிவனை மனத்திலே பூசித்து மௌனமாய் சிவபக்தியில் திளைத்தவர். |

| | | |
|---|---|---|
| | திருநீலகண்டர் | சிவனடியார் அமுதுண்ண சிறந்த திருவோட்டினைச் செய்து வழங்கியவர். |
| | காரியார் | மூவேந்தர்களிடம் காரிகோவை பாடி பொருள் பெற்று சிவாலயங்களை அமைத்தவர். |
| | கோச் செங்கட்சோழர் | சிவபக்தியில் மூழ்கி, சிவாலயங்களைக் கட்டித் தந்தவர். |
| | கணநாதர் | ஆலயங்களில் சரியைத் தொண்டு செய்து பல திருத்தொண்டாளர்களை உருவாக்கியவர். |
| | காரைக்கால் அம்மையார் | இசையால் இறைவனைப் பணிந்து அடியார் சேவை செய்து புனித நூல்களை அருளியவர். |
| | தண்டியடிகள் | குருடரானாலும் கோயில் தொண்டில் இறங்கி அடியார் சேவை செய்தவர். |
| | நேசர் | சிவனடியார்களுக்கு உடையும் கோவணமும் நெய்து வழங்கியவர். |
| | முனையடுவார் | பகைவர்களைப் போரில் வென்று பெற்ற பெருநிதியைச் சிவனடியாருக்கு வழங்குபவர். |

*‘அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்; அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்’ என்பது திருமூலரின் வாக்கு (திருமந். முதல் தந்.10:21:1). பாலும் நீரும் கலந்ததுபோல நெருப்பும் வெப்பமும் பிரிக்கவியலாதது போல இறைவனின் திருவருளே அன்பு என்று உணரப்படுகின்றது. அன்பின் வலிமையை வலியுறுத்த, அன்புடையார் எலும்பையும் பிறர்க்குத் தருவரென்றும் ஆருயிரோடு கலந்த உணர்வே அன்பென்று வள்ளுவர் பறைசாற்றுவது உணரப்படுகின்றது (திருக்குறள், அதி.8, 72). நீண்டகாலமாகத் தமிழர் பண்பாட்டில் விரவிக் காணக்கிடக்கின்ற வாழ்வியல் ஒழுக்கங்கள் அகமும் புறமும் என்ற அறமும் மறமும் அருங்கலவையாக ஈரமும் வீரமுமாக மிளிர்ந்தன (முகில் தமிழ்ச்செல்வன், 2011:208). தமிழர்களின் அன்புநெறியாகிய ஈரத்தைத்தான் தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே கொண்டு இயங்கிக் கொண்டிருந்த உண்மையை மறுக்கவியலாது. திருவள்ளுவர் அன்பும் அறனும் மனிதநேயத்தை வழிநடத்தும் இரு அச்சாணிகளாகக் குறிப்பிடுகின்றார் (திருக்குறள், அதி.5, 45). உயர்ந்த நிலையில் விரிந்து கிடக்கின்ற பண்பாட்டு விழுமியமாகத் திகழும் இறைபக்தி இன்று பழுதடைந்து காய்ந்து தோய்ந்து கிடப்பது வருத்தத்திற்குரியது. 67சதவிகித பெரியபுராண நாயன்மார்கள் மென்பக்தியான அன்பு நெறியிலேயே பக்தியைச் செலுத்தி வந்துள்ள தகவல் அறியப்படுகின்றது. எனவே, மென்பக்தியே நாயன்மார்களின் பக்தி மரபு. அன்பு நெறியே மிதமான பக்தியும் கூட என்ற தெளிவு வெளிப்படுகின்றது.*

**1. வன்பக்தி**

*கி.பி.5ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் வடநாட்டு சைவமான காளாமுகம், பாசுபதம், காபாலிகம் போன்ற வன்மையான நடவடிக்கைகளைக் கொண்ட பிரிவுகள் தமிழகத்தைச் சூழ்ந்தன (பத்மாவதி, 2003:61). கி.மு.3ஆம் நூற்றாண்டில் தோன்றிய தொல்காப்பியம், பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழர் வாழ்வியலில் அன்பு நெறி பண்பட்டு விளங்கியதை மெய்ப்பாட்டியலில் விரிவாக எடுத்துரைத்துள்ளது உணரப்படுகின்றது (வையாபுரிப்பிள்ளை,*

*1955:67).* எனவே, நாயன்மார்களின் வாழ்வியலில் அன்பு நெறி மேலோங்கி நின்ற உண்மையை நிராகரிக்க முடியாது. சிறுத்தொண்ட நாயனார் பைரவ கோலத்தில் வந்த சிவனடியாருக்குப் பிள்ளைக்கறி அமுது படைத்ததற்கு உண்மையான பக்தியே காரணமாகும்.

வடக்கிலிருந்து வந்த சிவனடியார் காபாலிக சைவத்தைப் பின்பற்றி, மனித நரபலி கேட்ட செய்தி பெரியபுராணத்தில் குறிக்கப்பட்டுள்ளது (பெ.புரா.*12:36:50).* அன்புநெறியைக்கையாண்ட சிறுத்தொண்டர் கூடவே கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்பது அறியமுடிகிறது. சிவத்தின்மீது அன்பும் கொள்கைப் பிடிப்பும் வலுத்திருந்ததால் சிறுத்தொண்ட நாயனார் தன் ஐந்து வயது மகனைப் பலியிட முனைந்த நிலை உணரப்படுகின்றது (பெ.புரா.*12:36:64).* இதுபோன்ற வன்பக்தி செலுத்தியவர்கள் ஒரு சிலரே என்றாலும் அவர்களுடைய மெய்யன்பின் பலனாக இறைவன் அருள் பாலித்த திறமும் அறியப்படுகின்றது. இன்றைய பகுத்தறிவு காலத்தில் பக்தி நிலை மிதமான போக்கில் கையாளப்படுவதே அறிவார்ந்த வழியாகும். மெய்கண்டார் அன்பு நெறியினை 'அவனே தானே அந்நெறி' என்று விளக்கப்படுத்துகின்றார் (ஆனந்தராசன், *2007:74).* சிறுத்தொண்டரின் உறுதியான வைராக்கிய அன்பினை அவருடைய வாழ்வியல் வரலாற்றில் நிகழ்ந்த அற்புதங்களின் உட்கருத்தாக உணர வேண்டுமேயன்றி அதனை அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆகவே, பக்தி என்ற பெயரில் வன்மையான நடவடிக்கைகளைத் தவிர்த்து, சைவ சித்தாந்தம் வலியுறுத்தும் அன்பு நெறியைப் பின்பற்றுவதே சரியானதும் முறையானதும் என்று விளங்குகின்றது.

ஐக்கிய நாட்டு மனித உரிமை மீறல் எட்டாவது விதி மனிதநேயத்திற்கு அப்பாற்பட்ட கொடூரச் செயல்களுக்கு மரண தண்டனை உட்பட கடுமையான தண்டனைகள் விதிக்க வழிகோலுகின்றது (கெ.ஏ. மைக்கல், *2006:58).* பெரியபுராணத்தில் கண்ணப்ப நாயனார் சிவலிங்கத்திலுள்ள கண்களில் வழிகின்ற இரத்தத்தை நிறுத்துவதற்குப் பச்சிலை மருத்துவம் கண்டும் நிற்காததால் தனது வலக் கண்ணைத் தோண்டி அப்பிய தகவலைச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். எவ்வகையான சோதனை வந்தாலும் அடிப்படை மனித உரிமை மீறல் நடக்கக்கூடாது என்பது இன்றைய அனைத்துலக நாடுகளின் சட்டமாகும்.

கண்ணப்ப நாயனாருக்கு இறைவனே நேரில் வந்து பக்தியைச் சோதித்தாலும் கொடூரச் செயலுக்கு ஆட்படுத்தியிருக்கக்கூடாது என்பது நிதர்சனமான உண்மை. இதற்குக் காரணம் சைவ சமயம் வன்முறைகளுக்கு எதிரானது என்பதை அன்பே சிவம்; வினைப்பயன்; வீடுபேறு; மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று பல உயர்ந்த தத்துவங்களைக் கொண்டது. கண்ணப்பர் செய்த கொடூரமான செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமே தவிர அதனைப் பின்பற்றுவதினால் சமய வளர்ச்சியிலும் சமூக வளர்ச்சியிலும் பின்னடைவுதான் ஏற்படும்.

செந்தமிழ் வித்தகர் அ.ச. ஞானசம்பந்தன் *(1999:452)* அறிவின் துணையை நாடாத பக்தியானது மூடபக்தியாய், வெறித்தனமாய், கொடூரச் செயல்களில் தனக்கும் பிறருக்கும் தீங்கிழைக்கும் நிலையில் ஒருவனைக் கொண்டு செலுத்திவிடும் என்று தெளிவுபடுத்துகின்றார். கண்ணப்ப நாயனாரின் உண்மை அன்பும் மனவுறுதியும் நிச்சயமாகக் கொண்டாடப்பட வேண்டுமே தவிர அவருடைய கொடூரச் செயலை அல்ல. உமையாளின் கருங்கூந்தலிலும் இயற்கையில் மணம் இல்லை என உறுதிபடக்கூறி 'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என நக்கீரன் இறைவனை நோக்கிக் கூறினான் (திருவிளையாடற் புராணம், *3:52:2538).* இங்கே நக்கீரனின் உண்மை அன்பு ஒரே சீராக இருப்பதை இறைவனே தவறு இழைத்தாலும் குற்றத்தைச் சுட்டி நீதியை நிலைநாட்டியப் பாங்கு எண்ணிப் பார்க்க வேண்டியதாகும். எனவே, எது வந்தாலும் வன்முறையைக் கையாளக்கூடாது என்பது தெளிவாகின்றது. அதேவேளையில், கண்ணப்பரின் பக்தித் திறமும் மனவுறுதியும் கொள்கைப் பிடிப்பும் இன்றைய தலைமுறையினருக்குத் தூண்டுதலாக அமைகின்றது என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

### உ. மென்பக்தி

மென்பக்தியினை சைவ நாற்பாதங்கள் வழியாக நாயன்மார்கள் புலப்படுத்தியிருப்பதைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற அடிப்படையில் விவாதிக்கப்படுகின்றன.

**(அ) சரியை**

*கி.மு.6ஆம் நூற்றாண்டுத் தொடங்கி சமணர்களின் ஆதிக்கத்தால் பல சிவன் கோயில்கள் பாழடைந்து கிடந்தன (வேலுப்பிள்ளை, 1985:36). அவற்றைப் புதுப்பிக்க வேண்டியதன் முக்கியத்தையும், இறைவன் குடிகொண்ட ஆலயத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் உலகுக்கு உணர்த்துவதற்காகவே அப்பரடிகள் கோயில்களில் முளைத்திருந்த புல்பூண்டுகளைத் தம் கரங்களால் களைந்து கோயிலைத் தூய்மையாக்கித் திருப்பணியைத் தொடங்கி வைத்தார் (மஞ்சுளா, 2004:24). இன்றைய காலகட்டத்தில் தொண்டு நெறி கோவிலையும் தாண்டி மனித குலத்திற்கே அடிப்படைத் தொண்டாக உலகளாவிய நிலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தொண்டு நெறி என்பது நேரடியாகவோ, மறைமுகமாகவோ பேறு குறைந்தவர்களுக்குப் பணம், பொருள், நேரம், சேவை ஆகியவற்றை மனமுவந்து கொடுக்கும் செயல்பாடுகள் ஆகும் (ஜோசப் மெத்தியூ, 2000:26).*

*மலேசியா உட்பட பல நாடுகளில் பணமாகக் கொடுத்து, தொண்டாற்றி வருபவர்களுக்கு அரசு வரிவிலக்கு அளித்துத் தொண்டு நெறியை ஊக்குவிக்கின்றது. தொண்டுழிய அடிப்படையில் சேவை செய்வதினால் மனம் வளமாகி, தியாக உணர்வு மேம்பட்டு, வாழ்க்கை திருப்திகரமாக விளங்கும் (சோ. கங்கா, 1996:27). தொண்டு நெறியினால் சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை அறிந்து மற்றவர்களுக்கும் விழிப்புணர்வு ஊட்டுவதற்கு வழிவகுக்கின்றது. பெரியபுராணத்தில் திருநாவுக்கரசரைக் குருவாக ஏற்றுத் தண்ணீர்ப் பந்தல் முதலிய தொண்டாற்றிய அப்பூதியடிகளின் பக்தி சான்றளிக்கின்றது (பெ.புரா.12:25:12).*

*ஒருமுறை திருப்புகலூரில் அப்பரடிகள் உழவாரப்பணியில் ஈடுபட்டிருந்த போது, சிவபெருமான் அவரைச் சோதிப்பதற்காக, குப்பைகளோடு பொன்னையும் ஓட்டையும் அவர் கண்ணில் படும்படியாகச் செய்த தகவல் அறியப்படுகின்றது (பெ.புரா.12:21:416). ஆனால் அப்பருடைய சொல், சிந்தை, செயல் எல்லாம் சிவமயமாகவே இருந்ததால், பொன்னையும் ஓட்டையும் சமமாகவே பாவித்து, புல்லோடும் கல்லோடும் சேர்த்து அங்கிருந்த பொய்கையிலே எறிந்தாராம் (பெ.புரா.12:21:417). அப்பரின் மனம் பிறழாத, நீங்காத பக்தியையும் உடனுரைமையும் நேர்மறையான சிந்தனையும் உயரிய பண்பாக இங்கு சுட்டப்பட வேண்டியதாகும். இதுபோல, தொண்டு நெறியில் நிற்பவர்களுக்கு ஆன்மிக நம்பிக்கை வலுப்பெற்று மனவமைதி கிடைப்பது உறுதியாகின்றது.*

**(ஆ) கிரியை**

*அகச்செயல்பாடுகள் பக்தி செலுத்துவது கிரியை நெறி என்று வழங்கப்படுகின்றது. அபிசேகம் செய்து மலர் மாலை சாற்றி மந்திரங்கள், பதிகங்கள் பாடி, அகத்திலும் புறத்திலும் ஆகமச் சடங்குகள் செய்தலே கிரியை வழி பக்தி செலுத்தும் முறையாகும் (முருகானந்தம், 2008:74). திருஞானசம்பந்தர் கிரியை நெறியில் நின்று தாமே மந்திரங்களைச் சொல்லி, தேவாரப் பதிகங்களைப் பாடிய செய்தியைப் பெரியபுராணம் குறிக்கின்றது (பெ.புரா.12:28:295). தினமும் இறைவனுக்குத் தவறாமல் அர்ச்சனை செய்பவரே கிரியை நெறியில் பக்தி செலுத்துபவர் என திருமூலர் உரைக்கின்றார் (திருமந்திரம் 10:5:5).*

*பல காலமாக கிரியை சடங்குகள் பார்ப்பனரின் வளைக்குள் சிக்கி, வருணாசிரமப் பிரிவுகளை ஏற்படுத்தித் தமிழர்களின் பண்பாட்டில் விழுமி நிற்கின்ற பக்தி கடத்தப்பட்டிருக்கின்றது. தாங்களே இறைவனுக்கு அர்ச்சனையும் பூசையும் செய்யத் தகுதியானவர்களென்று சொல்லி வறுமையிலும் ஏழ்மையிலும் வாடிய தமிழர்கள் நயவஞ்சகமாக ஏமாற்றப்பட்டிருக்கின்றனர்*

தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ் | 37

*(சித்திரலேகா, 1999:92). 'சலம் பூவோடு தூபம் மறந்தறியேன், தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்' என்று திருநாவுக்கரசர் உருகிப் பாடியுள்ளார் (அப்பர் தேவாரம், 4:1:6). இதன்வழி தமிழர் பண்பாட்டில் நீர், மலர், சாம்பிராணி புகை போன்ற பொருள்களைப் பயன்படுத்தி தமிழிலேயே தேவாரப் பதிகங்களைப் பாடிப் பக்தி செலுத்த முடியுமென்பது உறுதியாகின்றது.*

*இன்று பார்ப்பனரின் கட்டுப்பாட்டிலிருக்கும் கிரியை முறைகள் மேலும் பல சடங்கு சம்பிரதாயங்களைக் கூட்டி பணம் சம்பாதிக்கும் வணிகத் துறையாகப் பக்தி உருமாற்றம் பெற்றிருப்பதை அனைவரும் உணர வேண்டும் (சுதா, 2014:1). கிரியை சடங்குகள் எதுவாக இருந்தாலும் தமிழ்ப் பண்பாட்டை விட்டகலாத ஆகம முறைப்படி செயல்படுத்தினால் சாலச்சிறந்த வழியென உணரப்படுகின்றது (ந.சி. கந்தையா, 2003:34). எனவே, எளிமையாக உள்ளன்போடு செய்யப்பெறும் கிரியை முறையே இறைவனை அடையும் பக்தி மார்க்கம் என்பது தெளிவாகின்றது.*

**(இ) யோகம்**

*புலன்களை அடக்கி உயிர் இறையோடு ஒன்றிக்கும் தியானம், யோகாசனம் போன்றவற்றில் இரண்டறக் கலந்து செய்யப் பெறுகின்ற செயல்பாடுகள் யோக நெறி எனப்படும் (குமாரவேல், 2005:68). யோக நெறியில் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து திருமந்திர பாமாலையை அருளிய சித்தர் திருமூலரின் வாழ்க்கை வரலாற்றை 28 பாடல்களில் சேக்கிழார் புராணத்தில் பதிவு செய்துள்ளார். எட்டு படிமுறைகள் ஒருங்கிணைந்த பூரணமான யோக நெறி அட்டாங்க யோகம் என்று வழங்கப்படுகின்றது (சரஸ்வதி, 1988:72). இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகியவை அந்த எட்டு உறுப்புகளாகும் (திருமந்திரம், 3:554). இங்கு 'அட்ட' என்றால் எட்டு என்றும், 'அங்கம்' என்றால் பகுதி என்றும் பொருளுணர்த்தி எட்டு பகுதிகளையுடையதால் அட்டாங்க யோகம் எனப் பெயராயிற்று. ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஒன்றித்தலுக்கான பயிற்சிப் படிகளே யோகம் எனப்படுகின்றது (கோமதி சூரியமூர்த்தி, 2009:171).*

*கி.மு.3ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே யோக நெறி திராவிட பண்பாட்டு விழுமியமாக இருந்துள்ளதை மொகஞ்சதாரோ கல்வெட்டுகளில் கண்களை மூடித் தியான நிலையில் யோகி ஒருவர் தாமரை வடிவில் அமர்ந்திருந்த முத்திரை சான்று பகருகின்றது (பால் புருந்தன், 1981:29). சிந்துவெளி நாகரிகம் திராவிடப் பண்பாட்டோடு தொடர்புடையது என்பது அங்கு கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் பாண்டிய நாட்டுத் தொன்மங்களோடு ஒற்றுமை காணப்படுகிறதென உறுதிப்படுத்தப்படுகின்றது (மகாதேவன், 2010:24). பகவத் கீதையில் யோக நெறியைக் கர்ம யோகம் (செயல்), பக்தியோகம் (அன்பு), ஞானயோகம் (அறிவு) என மூன்று வகைகளாகப் பிரித்து விளக்கப்படுத்துவது தெரிய வருகின்றது. யோக நெறி உடல் ஆரோக்கியத்தை முன்னேற்றுவதோடு இறையோடு ஒன்றித்து ஞான உணர்வு பெற்று முக்தி அடைவதே முக்கியக் குறிக்கோளாகும் (பிரபுபாதா, 1984:45). பலகாலம் தவங்கிடந்து அட்டாங்க சித்திகளைக் கைவரப்பெற்று ஞானமடைந்து இறவா நிலையை எய்தி ஒளியுடலுடன் சன்மார்க்கத்தில் பரிணமிப்பவர்கள் சித்தர்கள் (மாரியப்ப செல்வராஜ், 2013:32).*

*இன்றைய அறிவியலாளர்கள் பரந்த பிரபஞ்சத்தை 'Big Bang Theory' என்ற பெருவெடிப்பின் விளைவாக கோள்களும் அண்ட சராசரங்களும் உருவாயின என்று இன்னமும் ஆய்ந்து கொண்டிருக்கின்றனர் (மார்தின் ராட்கிலிப், 2009:72). இது தமிழர் பண்பாட்டில் யோக தத்துவங்களைக் கொண்டு உள்நிலையில் ஏற்கெனவே உணர்ந்தவைதான் என்பது புலப்படுகின்றது. பிரபஞ்சத்தில் எது நடந்தாலும் மனித உடலுக்குள் ஏதோ ஒரு விதத்தில்*

பதிவாகி விடுகிறதென்பதை 'அண்டத்தில் உள்ளது பிண்டத்தில்' என்ற கருத்தின்வழி சிவயோகிகள் முன்வைக்கின்றனர். இது யோக மரபில் எல்லையில்லா பிரபஞ்சம் என்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லப்பட்ட தொன்ம கருத்தாகும் (கோமதி சூரியமூர்த்தி, 2009:296). இந்த உண்மையையெல்லாம் அறிந்துகொண்ட உலக நாட்டவர்கள் யோக நெறியைக் கற்று அதிலுள்ள அறிவியல் உண்மைகளை அறிந்து புத்தாக்க முறையில் மீண்டும் தமிழர்களுக்கு அளிப்பது வியப்பாக இருந்தாலும் அவலத்திற்குரியது. இதனை உணர்ந்தே தமிழர்களின் பொக்கிஷங்கள் அனைத்தையும் உலகமெலாம் பரவுவதற்கு 'ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்' என்றார் பாரதி (பிச்சை, 2013:91). இன்று யோகாசனம் உடற்பயிற்சிக்காகவும் மனவளர்ச்சிக்காகவும் அறிவு முதிர்ச்சிக்காகவும் வாழ்வியல் கலையாகவும் ஆன்மீக இலக்கை அடைவதற்கும் உலக மக்கள் அமலாக்குகின்ற ஓர் ஊடகமாக அமைகின்ற தகவல் அறியப்படுகின்றது (மார்க் சிங்கல்தன், 2008:82). எனவே, யோக நெறியில் இறைவனை அடைவது மட்டுமல்லாமல் மனித வாழ்வியலுக்குப் போதுமான சகல அறிவியல் இரகசியங்களும் அடங்கியுள்ளன என்பது கண்கூடு. யோகத்தின் எட்டு நிலைகள் பின்வருமாறு :

**யோகத்தின் எட்டு நிலைகள்**

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி.

அட்டாங்க யோகாசனத்தில் எட்டு படிநிலைகளும் ஒன்றோடொன்று வரிசைக்கிரமமாக தொடர்பு கொண்டவை. ஒரு படிநிலை முடிவடையும் சமயத்தில் அடுத்த படிநிலை துவக்கமாகும். விடாமுயற்சியுடன் தொடர் பயிற்சி செய்வதின்மூலம் எட்டு நிலைகளும் வசப்படும் என்று உணரப்படுகின்றது. இயமம் என்பது தீயனவற்றைத் தவிர்த்தல்; நியமம் ஆகியது தன்னை நெறிப்படுத்தி சுய ஒழுக்கம் பேணுதல்; ஆசனம் என்று சொல்லப்படுவது அமர்தல்; பிராணாயாமம் என்றால் மூச்சை அடக்கிக் கட்டுப்படுத்துதல்; பிரத்தியாகாரம் என வழங்கப்படுவது புறப்பொருளிலிருந்து புலனடக்குதல்; தாரணை என்றால் மனத்தை ஒருநிலைப்படுத்துதல்; தியானமானது மெய்ப்பொருளின் உண்மைத் தன்மையை ஆழ்ந்து சிந்தித்தல்; இறுதி அங்கம் சமாதி நிலையாகிய ஆழ்ந்த தியானத்தில் மெய்ப்பொருளுடன் ஒன்றித்தல் என்று விளக்கப்பெறும் (மார்க் சிங்கல்தன், 2008:28).

**(ஈ) ஞானம்**

அடுத்ததாக, ஞான நெறி என்பது சிவனடியார்கள் பக்தி செலுத்தி முக்தியடைந்த வழிமுறையாகும் (ஆறு. நாகப்பன், 2000:9). திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் மூன்று வயதில் உமையம்மையளித்த ஞானப்பாலை உண்டு ஞானம் பெற்ற வரலாற்று நிகழ்ச்சியை பெரியபுராணம் சுட்டுகின்றது (பெ.புரா.12:28:70). திருஞானசம்பந்தரைத் தவிர்த்து ஏனைய நாயன்மார்களுக்குக் கிட்டிய ஞானம் பெரியபுராணத்தில் தெளிவாகக் குறிக்கப்படவில்லை. எனவே, முந்தைய மூன்று நெறிகளில் ஞானத்தை அடைந்து மெய்ப்பொருளை முழுமையாக அறிந்துணரும் அறிவுச் செயல்பாடுகளே ஞானநெறியென தெளியப்படுகின்றது. முக்தான்மாவான திருஞானசம்பந்தருக்குக் கர்மவினையினாலும் முந்தைய தவப்பயனாலும் இறைவனால் ஞானம் அருளப்பெற்றது என்று உணரப்படுகிறது (பாலகிருஷ்ணன், 1988:39).

எந்தபேதமும் இல்லாமல் உலகை இயக்கிவருவது இறையருளே; எல்லா ஆன்மாக்களையும் மீண்டும் பிறந்துழலவைத்து அஞ்ஞானம் போக்கி சிவஞானம் புணர்த்தி பிறப்பறுத்து பிறவா நிலையைத் தருவது இறையருளே; பொய்ப்பொருளை விட்டு நீங்கி மெய்ப்பொருளைப் பற்றிக்கொண்ட எனக்கு எப்பொருளையும் வேண்டாவென ஒதுக்கித் தள்ளும் மனமின்றி எல்லாப் பொருளும் இறையருளே என்று உணர்ந்தேன் என உரைக்கின்றார் காரைக்கால் அம்மையார் (கதிர் முருகு, 2007:44). இதிலிருந்து இறையருளால் ஞானம் அடைந்தவர்கள்

தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ் | 39

முக்காலத்தை உணரப் பெற்றவர்கள் என்ற உண்மை வெளிப்படுகின்றது. இதனால்தான், திருஞானசம்பந்தர் சமணர்களின் சூழ்ச்சியைத் தமிழ்ஞானத்தால் வென்று சைவத்தை நிலைநிறுத்த முடிந்ததென தெரிய வருகின்றது. பாண்டிய மன்னனின் அரண்மனைக்குச் செல்லும்முன் நாவுக்கரசர் தடுத்து நிறுத்தியும் நாளும் கோளும் சிவனடியார்களுக்கு நல்லதே செய்யுமென்று துணிந்து பாடியதும் இந்த சிவஞானத்தால்தான் என்ற உண்மை விளங்குகின்றது (த.கோ. பரமசிவம், 2002:89).

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (1823-1874) மனிதநேயத்தோடு வாழ்ந்த வள்ளலார் திருஞானசம்பந்தரைக் குருவாக நினைத்து, மிகவும் குறுகிய காலத்தில் ஞானம் பெற்று மரணமிலாப் பெருவாழ்வு அடைந்தாரென அறியப்படுகின்றது (திருவருட்பா, 1981:94). புத்த மதத்தை நிறுவிய கௌதம புத்தர் இல்லறத்தைத் துறந்து போதி மரத்தடியில் ஞானம் பெற்ற நிகழ்ச்சி வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது (எஸ்.எஸ். ஜான், 2001:32). உடற்கூற்றுத் தத்துவங்களை அறிந்த விஞ்ஞானிகளான தமிழ்ச் சித்தர்கள் மெய்ஞ்ஞானத்தோடு அறிவியலைத் துல்லியமாகக் கூறி இயற்கையோடு எங்கும் எதிலும் கலந்து நிற்கின்றனர் (கைலாசபதி, 2009:64). ஞான வடிவாய்த் திகழும் முருகப்பெருமான் ஆண்டியாய் நிற்கின்ற கோலம் உயிர்கள் தவமிருந்து பற்றுகளை விட்டு ஞானம் அடைவதே என்ற தாத்பரியம் உணர்த்தப்படுகின்றது. பரத்தையர் மஞ்சத்தில் காம இன்பத்தில் திளைத்திருந்த அருணகிரிநாதரை தடுத்தாட் கொண்ட முருகப் பெருமான் ஞானம் அளித்த செய்தி அறியப்படுகிறது (திருவரசு, 2005:40). ஞானம் பெற்ற அத்தனை பேரும் உத்தமரும் அல்லர்; துறவிகளும் அல்லர்; மாறாக இறையருளால் அவர்களுக்குள் ஏற்பட்ட மனமாற்றமே காரணமென தெரிகின்றது.

இன்றைய காலக்கட்டத்தில் ஞான நிலை எய்துவது எட்டாக் கனியாக இருப்பதற்குப் பல தடங்கல்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. சேக்கிழார் நாயன்மார்களின் பக்தித் திறத்தை உரைக்கும் போது, தர்மநெறி மாறாதவர்கள் என்ற கருத்தை முன்வைக்கின்றார் (பெ.புரா.12:0:76). தர்மநெறி என்பது அறநெறியாகும். நாயன்மார்களின் வாழ்வியல் அனைத்தும் அறநெறியிலேயே நடத்தப்பட்டுள்ளன என்பது உறுதியாகின்றது. வள்ளுவனும் திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என்று வரிசைப்படுத்தி, அறநெறிக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள தகவல் தெரிய வருகின்றது. இதையே ஔவையார் 'அறஞ் செய விரும்பு' என்று ஆத்திசூடியில் அறவழியையே வலியுறுத்துகின்றார் (அருள்நம்பி, 2009:21). மனசாட்சிக்குப் புறம்பாக அல்லாமல் சத்திய நெறியான அறநெறியே பக்தி ஏற்படுவதற்கு அடித்தளமாக விளங்குகின்றது.

இன்று எங்கும் அறம் பிறழ்ந்து பரவலாக அதர்ம நெறிகளான பொய், பித்தலாட்டம், கள்ளம் கபடு, ஏமாற்று வேலை, நயவஞ்சகம், தில்லுமுல்லு, கொலை, கொள்ளை, இலஞ்சம் போன்றவை தலைவிரித்தாடுகின்றன. இதற்கு அடிப்படைக் காரணியாக விளங்குவது உயிர்களின்மீது மலத்தின் பிணைப்பு என்பதனை மனிதர்கள் அறியாமல் இருப்பதே. சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசக் கோட்பாடுகளைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. (ஞானகுமாரன், 1994:46). இதிலே பாசம் உயிர்களைச் சூழ்ந்துகொண்டு உலக மாயையில் மூழ்கடிக்கும். முக்கியமாக இன்றைய உலகில் ஆணவம் பலரிடம் மேலோங்கி நிற்கின்றது. ஆணவ மலத்தால் மனிதனை மனிதன் மிரட்டுகிறான். ஆதிக்கம் செலுத்துகிறான்; அடக்கி ஆளுகிறான்; கபட நாடகமாடுகிறான்; ஏய்த்துப் பிழைக்கிறான். சுருக்கமாகச் சொன்னால் மாயையில்உழன்று கொண்டிருக்கிறான். அறநெறி அற்றவர்களிடமும் ஆணவத்தில் மிதப்பவர்களிடமும் எங்ஙனம் கடவுள் பக்தி இருக்கும்? கடவுளும் அவர் உள்ளத்தில் குடியிருப்பாரோ? பிறகு எப்படி நெருங்குவது ஞானமார்க்கத்தை? ஞானம் என்பது உலக அறிவன்று; மெய்ஞ்ஞானம் என்பதைத் தெளிவு கொள்ள வேண்டும். வள்ளுவரும் 'மெய்ப்பொருள் காண்பது அறிவு',

வாலறிவன் என்று இறைஞானத்தையே குறித்தார் (வரதராசனார், *2001:212*). பின்வரும் படம் சைவ நாற்பதங்களின் படிநிலைகளைக் காட்டுகின்றது.

சைவ நாற்பதங்களின் படிநிலைகள்

**1.சரியை 2.கிரியை 3.யோகம் 4.ஞானம்**

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாற்பதங்களில் சைவ நாயன்மார்கள் பக்தி செலுத்திய படிநிலைகளைப் படம் காட்டுகின்றது.

### 4.0 முடிவுரை

கடவுளுக்கும் உயிர்களுக்கும் இடையேயுள்ள அன்பெனும் பக்திக் கடலைத் தன்னகத்தே கொண்டது பெரியபுராணம். பெரியபுராணத்தில் வெளிப்படும் பக்திநெறி பின்வருமாறு தொகுத்தளிக்கப்படுகின்றது.

பக்தியைப் பற்றிய தெளிந்த சிந்தனையைப் பன்நெடுங் காலமாக சைவ ஆகமங்கள் வலியுறுத்துகின்றன. பக்தி என்பது கடவுள்மீது செலுத்தப்படும் தூய அன்பு உணர்வாகும். இது எந்த நிபந்தனையுமின்றி அறிவு நிலையைக் கடந்த என்றென்றும் மாறாத ஆழ்மனத்திலிருந்து கிளர்ந்தெழும்பும் அன்பு உணர்வு என்று தெளியப்படுகின்றது. இருபத்தொரு நாயன்மார்கள் வன்பக்தியும் நாற்பத்திரண்டு நாயன்மார்கள் மென்பக்தியும் செலுத்திய பகுப்பு தெரியவருகின்றது. மென்பக்தியே நாயன்மார்களின் பக்தி மரபு. அன்பு நெறியே மிதமான பக்தியும் கூட என்ற தெளிவு வெளிப்படுகின்றது. பக்தி என்ற பெயரில் வன்மையான நடவடிக்கைகளைத் தவிர்த்து சைவ சித்தாந்தம் வலியுறுத்தும் அன்பு நெறியைப் பின்பற்றுவதே சரியானதும் முறையானதும் என்று விளங்குகின்றது. எது வந்தாலும் வன்முறையைக் கையாளக்கூடாது என்பது தெளிவாகின்றது. கண்ணப்பரின் பக்தித் திறமும் மனவுறுதியும் கொள்கைப் பிடிப்பும் இன்றைய தலைமுறையினருக்குத் தூண்டுதலாக அமைகின்றன என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

அப்பரின் மனம் பிறழாத நீங்காத பக்தியையும் உடனுரைமையும் நேர்மறையான சிந்தனையும் உயரிய பண்பாக இங்கு சுட்டப்பட வேண்டியனவாகும். தொண்டு நெறியில் நிற்பவர்களுக்கு ஆன்மிக நம்பிக்கை வலுப்பெற்று மனவமைதி கிடைப்பது உறுதியாகின்றது. கிரியை சடங்குகள் எதுவாக இருந்தாலும் தமிழ்ப் பண்பாட்டை விட்டகலாத ஆகம முறைப்படி செயல்படுத்தினால் சாலச் சிறந்த வழியென உணரப்படுகின்றது. எளிமையாக உள்ளன்போடு செய்யப்பெறும் கிரியை முறையே இறைவனை அடையும் பக்தி மார்க்கம் என்பது தெளிவாகின்றது. யோக நெறியில் இறைவனை அடைவது மட்டுமல்லாமல் மனித வாழ்வியலுக்குப் போதுமான சகல அறிவியல் இரகசியங்கள் அடங்கியுள்ளன என்பது கண்கூடு. இறையருளால் ஞானம் அடைந்தவர்கள் முக்காலத்தை உணரப் பெற்றவர்கள் என்ற உண்மை வெளிப்படுகின்றது. மனசாட்சிக்குப் புறம்பாக அல்லாமல் சத்திய நெறியான அறநெறியே பக்தி ஏற்படுவதற்கு அடித்தளமாக விளங்குகின்றது. ஞானம் பெற்ற அத்தனை பேரும் உத்தமரும் அல்லர்; துறவிகளும் அல்லர்; மாறாக இறையருளால் அவர்களுக்குள் ஏற்பட்ட மனமாற்றமே காரணமெனத் தெரிகின்றது. ஞானம் என்பது உலக அறிவன்று; மெய்ஞ்ஞானம் என்பதைத் தெளிவுகொள்ள வேண்டும்.

தெய்வச் சேக்கிழார் பக்திநெறி ததும்ப பெரியபுராணத்தைப் படைத்துள்ளார். பண்பாட்டுக்கு முன்னுரிமை அளித்து விளங்குவதால் பெரியபுராணம் உலகப் புகழ் பெற்றுத் திகழ்கின்றது.

தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ் | 41

## Bibliography

Arulnambi. (2009). AuvaiyâriI Âtticcûmi Nîtikkataika7. Thanjavur: Siva Publication.

Arunai Vadivelu Muthaliyar. (1963). Tirunâvukkaracu NâyaIâr Aru7icceyta Tçvârat TiruppatikaE ka7. Tharumapuram: Tharumaiyathinam.

Chitralekha (1999). Hindu manners, customs and ceremonies. New Delhi: Crest Pub. House.

Ganapathi, P. (2005). NâyaImâr Vâ;vil Pakti. Thirupananthal: Kasi Thirumadam.

Gangga Somany (1996). Light of Hinduism. Calcutta: Om Somany Charity Trust.

Gopalakrishnan, R. (1990). Religion And Mysticism In The Periyapuranam. Madras: University of Madras.

Irasamanikanar, N. (2008). Tami;p PaGpâmmu Varalâ_u. Chennai: Kavya Publication.

John S. Strong, (2001). The Buddha: a short biography. Oxford: Oneworld.

Joseph Mathew (2000). Mother Teresa: seeker of souls. Delhi: Authorspress.

Kaliyanasuntharanar, M. (2009). PeriyapurâGak Kataika7. Chennai: Thirumagal Nilayam.

Mark Singleton (2008). Yoga in the modern world: contemporary perspectives. London: Routledge.

Martin Ratcliffe (2009). Cosmology and the evolution of the universe. Santa Barbara, Calif: Green wood Press.

Michael K. Addo (2006). International law of human rights. Aldershot, Hants., England Burlington, VT, USA : Ashgate Pub. Co.

Nagaswamy, R. (1989). Siva bhakti. New Delhi : Navrang.

Nilakanta Sastri, K.A (1935). The Cholas. Madras : University of Madras.

Paul Brunton (1981). Indian philosophy and modern culture. Delhi : Bharatiya Book Corporation.

Prabhupada (1984). Bhagavad Gita As It Is. Bhakti vedanta book trust, Inc, ISKCON Thirunyanasambanthan, P. (1973). The Concept of Bhakti. Madras : University of Madras.